**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 130/2010</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **16.10.2025** |
| **பெயர்** | **வாசுதேவன்** |
| **த/பெ** | **ரத்தினம்** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 02.55.p.m**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் இவ்வழக்கின் தரப்பினா். எனக்கு இவ்வழக்கின் விவரங்கள் நேரடியாக தெரியாது. நான் இவ்வழக்கின் பிரதிவாதியாவேன். இவ்வழக்கில் நான் பிரதிவாதியாக இருந்து கொண்டு தற்போது வாதிக்கு சாதகமாக சாட்சியம் அளிப்பது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியும். இந்த வழக்கில் எதற்காக வாதி தாக்கல் செய்தார் என்றால் லலித்தாவிற்கு வீட்டு மனை முறையாக சென்றடைய வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்த வழக்கு.

2. லலிதா கோவந்தரெட்டியாரின் மகள். கோவிந்தரெட்டியார் எனக்கு சித்தப்பா முறை. இந்த வழக்கு பாகபப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது வாதிகளுக்கு எத்தனை பாகம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிகளோடு சேர்த்து 5 பாகம். நான் பிரதிவாதியாக இருந்து கொண்டு எதற்காக வாதி தரப்பில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் லலிதாவிற்கு சேர வேண்டிய சொத்தினை அளிக்காமல் பிரதிவாதிகள் ஏமாற்றுவதால் நான் தற்போது வாதிகளின் பக்கம் சாட்சியம் அளிக்கிறேன்.

3. எனக்கு சேர வேண்டிய சொத்து வந்துவிட்ட காரணத்தினால் நான் தற்போது வாதிகளுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன். எனது பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் போதே என்னிடம் சொத்து வந்து

சேர்ந்துவிட்டது. எனது தந்தைக்கு பூர்வீகமாக கிடைக்கப்பெற்ற சொத்து. என்னிடம் வந்து சேர்ந்த சொத்தினை தான் நான் தற்போது அனுபவித்து கொண்டு வருகிறேன். நான் அந்த சொத்தில தான் தற்போதும் குடியிருந்து வருகிறேன். அநத சொத்தின் விவரம் பழை சர்வே எண் 168, புதிய சர்வே எண் 420 ல் அடங்கிய 21 செண்ட் தோராயமாக 1300 சதுர அடி.

4. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் வழக்கு சொத்தின் விஸ்தீர்ணம் 1382 ச.மீ. என குறிப்பிட்டுள்ளது. அதனை கணக்கிட்டால் தோராயமாக 32 செண்ட் வரும்பட்சத்தில் நான் எதை வைத்து 21 செண்ட் என கூறுகிறேன் என்றால் எனது தந்தை முதலில் வாங்கிய து 21 செண்ட் அதை தான் 5 பாகமாக எனது தந்தை இருக்கும் காலத்திலேயே பிரித்து கொடுத்துவிட்டார்.

5. அதில் என் பங்கு 4 ½ செண்ட் மற்ற வாரிசுகளுக்கு தலா 4 செண்ட் வீதம் என பிரித்து கொடுக்கப்பட்டது. பின்பு 1ம ்பிரதிவாதியான ஜெராமன் அருகில் உள்ள சொத்துக்களையும் வாங்கிய பிறகு அதன் மொத்த விஸ்தீர்ணம் சேர்த்து வழக்கு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 1382 ச.மீ. என குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான். மேற்கூறியவாறு வழக்கு சொத்தில் முழுமையாக பாகம் பிரித்து கொண்ட பிறகு எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஊர் பெயரியவர்கள் முன்னிலையில் மேற்கூறியவாறு பாகம் பிரிக்கப்பட்டது ஆனால அது பதிவு செய்யப்படாததால் இந்த வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டது.

6. லலித்தாவிற்கு மட்டும் தான் அவரின் பாகம் சேரவில்லையா என்றால் லலித்தாவிற்கு மற்றும் கடைசி மகனான வரதனுக்கும் அவரின் பங்கு சென்றடையவில்லை. வரதன் இறந்துவிட்டார் அவருக்கு 2 வாரிசுகள் அவர்களின் பெயர்கள் பரிமளா மற்றும் பட்டு. சாட்சி தற்போது வரதனுக்கு மேற்கூறிய 2 பேர்களுடன் சேர்த்து 3 வாரிசுகள் என்றும் அதில் சரவணன் என்பவர் இறந்துவிட்டார் என்று கூறுகிறார். சரவணன் இறந்து 3-4 வருடங்கள் ஆகிவிட்டன.

7. மேற்கூறிய கோவிந்தன் மற்றும் வரதனை தவிர்த்து பிற வாரிசுகளுக்கு அவர் அவர்களின் பங்கு பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் பிரித்து கொடுக்கப்பட்டது லலித்தாவிற்கு சேர வேண்டிய பங்கையும் சேர்த்து 1ம் பிரதிவாதி வேலி அமைத்து அனுபவித்து கொண்டு வருகிறார். நானும் இந்த வழக்கின் ஒரு பிரதிவாதி என்பதால் மேற்சொன்னவாறு ஜெயராமனை போல நானும் லலித்தாவின் பங்கை அனுபவித்து கொண்டு வருகிறேனா என்றால் சரியல்ல. எனக்கு வந்தடைந்த 4 செண்ட் நிலத்தை மட்டும் தான் நான் அனுபவித்து வருகிறேன்.

8. அவ்வாறு 1ம் வாதி சொத்தில் நான் இடையூறு செய்யாததால் இந்த வழக்கில் என்னை பிரதிவாதியாக சேர்த்தது தவறு என்றால் முதலில் பிரதிவாதியாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டேன் எனக்கு வந்து சேர வேண்டிய 4 செண்ட் நிலம் வந்துவிட்டதாலும் லலித்தாவுடன் தற்போது எந்த பிரச்சனை யும் இல்லாத காரணத்தினால் தான் நான் வாதிகளுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு எனக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது.

9. நான் தற்போது வாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்க ஏதேனும் அழைப்பாணை நீதிமன்றத்தில் இருந்து வந்ததா என்றால் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை 1ம் வாதியான லலித்தா அழைத்ததன் பெயரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு சொத்து பூர்வீக சொத்தா என்றால் பூர்வீக சொத்து அல்ல எனது தந்தையான ரத்தினம் வாங்கிய சொத்து. முனிசாமியின் வாரிசுகள் ரத்தினம், கோவந்தரெட்டி, ஆறுமுகம், ஜெயராமன் மற்றும் வரதன். ரத்தினம் வாரிசுகள் என்னுடன் சேர்த்து மொத்தம் 10 நபர்கள். 1ம் வாதியான லலித்தா என்னுடைய சித்தப்பாவின் மகள்.

10. முனுசாமி முதலியார் எனது தாத்தா. என்னுடன் பிறந்தவர்கள் 10 நபர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களை ஏன் இந்த வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் உயிருடன் இருப்பவர்களே வழக்கின் தரப்பினர்களாக உள்ளனர். மற்றும் சிலர் என்னுடைய சிறு வயதிலேயே இறந்துவிட்டனர். உயிருடன் இருப்பவர்கள் இவ்வழக்கின் தரப்பினர்களாக உள்ளனர். இந்த வழக்கில் 4ம் வாதியான ரேனுகா என்கிற ரேனுகா தேவி யார் என்றால் என்னுடைய சித்தப்பாவான வரதனின் மனைவி அவர் இறந்துவிட்டார்.

11. அபூர்வம்பாள் யார் என்றால் என்னுடைய அத்தை. முனுசாமியின் மகள். அவர் இறந்துவிட்டர். இறந்து சுமார் 10 வருடங்கள் ஆகின்றது. அபூர்வம்பாளுக்கு திருமணம் ஆகிவிட்டது அவரின் மகள் தான் 4ம் வாதியான ரேனுகா என்கிற ரேனுகா தேவி. அபூர்வம்பாளுக்கு திருமணம் ஆகிவிட்டு அவர் தனியாக சென்றுவிட்டார் என்றும் அதன் பிறகு மேலே கூறிய ரத்தினம், கோவந்தரெட்டி, ஆறுமுகம், ஜெயராமன் மற்றும் வரதன் தான் வழக்கு சொத்தை அனுபவித்து கொண்டு வருகிறோம் என்றால் அபூர்வம்பாளுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை.

12. வழக்கு சொத்தில் யார் பெயரில் பட்டா தாக்கல் ஆகி வருகிறது என்றால் என்னுடைய பாகத்திற்கு எனது தாயாரான இந்துராணி பெயரில் உள்ளது. மற்ற பாகங்களுக்கு ஜெயராமன் பெயரில் பட்டா தாக்கல் ஆகி உள்ளது.அந்த பட்டாக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 03.41.p.m.**